596

596

# ஸன்மார்க்கப்ரதர்சினீ

Vol 2. NOVEMBER 1934. No. 3.



மாதப் பதிப்பு

பத்ரிகாசிரியர்: சாஸ்திர ரத்னம் தேதியூர் சுப்பிரமணியசாஸ்திரிகள்.
மதுரை (S.I.)

தனிப்பிரதி விலை அணா 2.

Copy Right.

# ஸ்ரீமத் பகவத்கீதை.

ஸாக்ஷாத் பகவானான ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவானவர் அர்ஜுனனுடைய வ்யாமோஹத்தைப் போக்கடிப்பதற்காக தத்வோபதேசம் செய்வதற்கு ப்ரவ்ருத்தித்தார். அர்ஜுனனே, கௌரவர்களோடுகூட போர்செய்ய, தானாகவே ப்ரவ்ருத்தித்து விட்டு, பிறகு கௌரவர்களுடைய பக்ஷத்தில் நின்றுவரும் பீஷ்மர், த்ரோணர், முதலான மஹான்களைப் பார்த்தவுடன், 'ஐயோ இந்த மஹான்களை வதம்செய்த பாபத்தை நான் அடைவதா' என்ற சோகத்ததுடன், போர் செய்வதான முயற்ச்சியையும், உத்ஸாஹத்தையும், விட்டுவிட்டு பேசாமலிருந்து விட்டான். அந்த சமயத்தில் அர்ஜுனனுக்கு ஸ்வதர்மத்தின் பெருமை தெரியாமல் போய்விட்டதே க்ஷத்ரியனுக்கு யுத்தம் ஸ்வதர்மமல்லவா. அதை அர்ஜுனன் விட்டு விடயத்தனம் செய்கிறானே. அந்த புத்தியின் ப்ரமத்தை (மயக்கத்தை) நாம் நிவ்ருத்தி செய்துவிட வேண்டுமென்று பகவான் நினைத்து, "அர்ஜுனா, பீஷ்மர் முதலான மஹான்களுடைய ஆத்மாவைப்பற்றி நீ துக்கப்படுகிறாயா? அல்லது அவர்களுடைய தேஹத்தைப்பற்றி நீ துக்கப்படுகிறாயா? அதாவது நீ போர்செய்தால் உன் ஆயுதங்களால் அடிபட்டு அழியும் வஸ்து பீஷ்மாதிகளுடைய ஆத்மாவா, அல்லது அவர்களுடைய சரீரமா?" என்று விகல்பம் செய்துகொண்டு பீஷ்மர், முதலான மஹான்களுடைய ஆத்மாவைப் பற்றித்தான் துக்கப்படுகிறது என்ற முதலாவது பக்ஷத்தை

"अशोच्यान् अन्वशोचस्त्वं" "அசோச்யான் அந்வசோசஸ்த்வம்"[4] என்ற ச்லோகம் முதல் "अविनाशितु तद्विद्धि" என்ற ச்லோகம் வரையிலுமுள்ள ஏழு ச்லோகங்களால் அநேகப்ரகாரமாக அதாவது ஆத்ம ஸ்வரூபம் அசோச்யம், துக்கத்திற்கு விஷயமாகாத பொருள் அது உத்பத்தி விநாசமற்றது ஸர்வவ்யாபகம், அகண்டமான ஆனந்த ஸ்வரூபம் என்று உபதேசித்து, நிராகரித்து விட்டார்.

பீஷ்மர் முதலான மஹான்களுடைய தேஹத்தைப்பற்றி துக்கப்படுகிறது என்ற இரண்டாவது பக்ஷத்தையும் இரண்டுவிதமாக பகவான் விகல்பம் செய்துகொண்டு நிராகரணம் செய்கிறார். அந்த இரண்டுவிதமான விகல்பமோ, (1) அர்ஜுனா நீ போர்செய்து ஆயுதங்களால் பீஷ்மர் முதலான மஹான்களுடைய தேஹத்தை அடித்து அழியச் செய்யாமலிருந்தால் அந்த தேஹங்கள் அழியாமலே சாச்வதமாகவே இருந்துவரும் என்று உன் அபிப்ராயம்? (2) அல்லது சரீரங்கள் அழியக்கூடியது தான். ஆகிலும் என்மூலம் அது அழிய வேண்டாம். என்று உன் அபிப்ராயம்? என்றுதான் இருவகை விகல்பமாகும். அந்த விகல்பத்தை க்ரமமாக நிராகரிக்கும் ச்லோகத்தை அடியிற்கண்டபடி அறியவும். அதாவது,

**अन्तवन्त इमे देहाः नित्यस्योक्ताःशरीरिणः ।**
**अनाशिनोऽप्रमेयस्य तस्माद्युध्यस्वभारत ॥**

அந்தவந்த இமே தேஹா: நித்யஸ்யோக்தா:சரீரிண: ।
அநாசிநோऽப்ரமேயஸ்ய தஸ்மாத்யுத்யஸ்வ பாரத ॥

இதன் பதவுரையாவது,

**नित्यस्य** (நித்யஸ்ய) = உத்பத்தி விநாசமில்லாததாயும்
**अनाशिनः** (அநாசிந:) = அதிஷ்டான ஸாக்ஷாத்காரத்தால் நசிக்கும் ஸ்வபாவமில்லாததாயும்

| | | |
|---|---|---|
| **अप्रमेयस्य** (அப்ரமேயஸ்ய) | = | தேசத்தாலோ, காலத்தாலோ, வஸ்துவினுலோ பரிச்சேதமற்ற தாயும் உள்ள |
| **शरीरिणः** (சரீரிண:) | = | ஆத்மாவினுடைய |
| **इमे देहाः** (இமே தேஹா:) | = | இந்த தேஹங்கள்தான் |
| **अन्तवन्तः** (அந்தவந்த:) | = | முடிவோடு கூடினதுகளாக |
| **उक्ताः** (உக்தா:) | = | ச்ருதிகளால் சொல்லப்பட்டிருக் கின்றன |
| **तस्मात्** (தஸ்மாத்) | = | ஆகையால் |
| **हे, भारत** (ஏ, பாரத) | = | உத்தமமான பரத வம்சத்தில் பிறந்த ஏ அர்ஜுனு |
| **युध्यस्व** (யுத்பஸ்வ) | = | கவலையின்றி, யுத்தமாகிற ஸ்வதர் மத்தை கைவிடாதே |

இந்த ச்லோகத்தில் ஆத்மஸ்வரூபத்தை சரீரி என்ற பதத்தால் உபயோகித்திருப்பதினுல், தேஹம் வேறு, ஆத்மா வேறு என்ற விவேகமில்லாமல் தேஹமே ஆத்மா என்று நினைக்கிற மூடலோ கங்களையனுசரித்து, தேஹத்தில் அத்யாஸம் செய்யப்பட்ட மித்யா பூதமான (பொய்யான) ஆத்மாவுக்குத்தான் ஜன்ம மரணுதிகளை போதிப்பதில் "**देवदत्तो जातः, यज्ञ दत्तो मृतः**" ("தேவதத்தோ ஜாத:, யக்ஞ தத்தோ ம்ருத:") என்ற லோக ஸித்தமான ப்ரத்யக்ஷ ப்ரதீதிக்கு ஸாமர்த்யமே தவிர, தேஹத்திற்கு விலக்ஷணமான சுத்த ஆத்மஸ்வரூபத்திற்கு, உத்பத்தியுமில்லை, விநாசமுமில்லை. அது எல்லா தேசத்திலும், எல்லா காலத்திலும், எல்லா வஸ்துவாகவும் அகண்டமாக விளங்கிவரும் பரம் பொருளாகும் என்று ஸூசிப் பிக்கப்படுகிறது. **अनाशिनः, अप्रमेयस्य,** (அநாசிந:, அப்ரமேயஸ்ய)

என்ற இரண்டு பதங்களினல், ஆத்மாவினிடத்திலுள்ள நித்யத்வமானது தர்க்கத்தினல் த்ருடம் செய்யப்படுகிறது. அதாவது, ஆத்மா அநித்யமானல் அந்த ஆத்மாவும் ஒரு அதிஷ்டானத்தில் கல்பிக்கப்பட்டதாகத் தானிருக்கவேண்டும். அந்த அதிஷ்டான வஸ்துவின் ஸாக்ஷாத்காரம் வந்தவுடன் ஆரோபிதமான ஆத்மஸ்வரூபமும் அழிந்துவிடவேண்டும். அநுபவத்திலோ அவ்விதம் காணும். ஆகையால் ஸமஸ்தமான ப்ரபஞ்சத்திற்கும் ஆத்மாதான் அதிஷ்டானமாக ஆகுமேதவிர, அந்த ஆத்மாவுக்கு வேறு அதிஷ்டானமில்லை. ஆத்மாவோ ஸர்வாதிஷ்டானமானதினல் நித்யமான வஸ்துதான் என்ற தர்க்கத்தை **अनाशिनः** (அநாசிந:) என்ற பதமும், அப்படியே ஆத்மா அநித்யமானல், தேசத்தாலும், காலத்தாலும், வஸ்துவினலும், பரிச்சேதத்தை யடைந்திருக்கவேண்டும். ஆத்மாவோ, தேசத்தாலோ, காலத்தாலோ, வஸ்துவினலோ, அபரிச்சின்னமாகத்தான் அனுபவிக்கப்படுகிறது. அதனல் ஆத்மா அநித்யமல்ல நித்யன்தான் என்ற தர்க்கத்தை "**अप्रमेयस्य**" (அப்ரமேயஸ்ய) என்ற பதமும் வெளியாக்குகிறது.

**आत्मा, नित्यः, अपरिच्छिन्नत्वात्, यन्नैवं तन्नैवं यथा घटः।**
**आत्मा, नित्यः, अधिष्ठानसाक्षात्कार अनिवर्त्यत्वात्, यन्नैवं तन्नैवं यथा शुक्तिरजतं ॥**

(ஆத்மா, நித்ய:, அபரிச்சின்னத்வாத், யந்நைவம் தந்நைவம் யதா கட:
ஆத்மா, நித்ய: அதிஷ்டாநஸாக்ஷாத்கார அநிவர்த்யத்வாத், யந்நைவம் தந்நைவம் யதா சுக்திரஜதம்)

என்று தர்க்கத்தின் ஆதாரத்தையும் விவேகிகள் அறியக்கூடும்.

ச்ருதி ஸித்தமான ஆத்மநித்யத்வமானது இந்த தர்க்கத்தினுல் த்ருடம் செய்யப்படுகிறது. இதனுல் ந்யாயத்துடன் கூடின ச்ருதிகளால் ஆத்ம நித்யத்வமானது ப்ரகாசப்படுத்தப்படுகிறது. அத்துடன் இந்த ச்லோகத்தில் "शरीरिण:" (சரீரிண:) என்று ஆத்மாவை ஏகவசனமாகவும் (ஒருமை) "देहा:" தேஹா: என்று தேஹத்தை பஹுவசனமாகவும் (பன்மை) சொல்லியிருப்பதினுல், தேஹங்கள் அநேகங்களானுலும், ஆத்மா ஒன்று தான் என்ற அத்வைத ஸித்தாந்தமும் பகவானுல் ப்ரகாசப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு சரீரத்திற்கும் ஒவ்வொரு ஆத்மா என்று சொல்கிற த்வைதிகள் இந்த ச்லோகத்தின் வ்யாக்யானம் செய்கிற அவசரத்தில், கொஞ்சம் மௌன தர்மத்தை அடையத்தான் வேண்டும். தேஹங்கள் "अन्तवन्त:" ("அந்தவந்த:") என்ற பதத்தால் முடிவோடு கூடியவைகள் என்று சொன்னதிலிருந்து எப்போதும் தேஹம் நசிக்கும் ஸ்வபாவமுள்ள பதார்த்தம் என்று வெளியாகிறது. இதனுல் போர் செய்து ஆயுதங்களால் அடிக்காமலிருந்தால் பீஷ்மர் முதலானவர்களுடைய தேஹங்கள் அழியாமலே சாச்வதமாக இருக்கும், என்று எண்ணின அர்ஜுனனுடைய முதல் பக்ஷமானது நிராகரிக்கப்பட்டதாக ஆய்விடுகிறது.

"अन्तवन्त:" (அந்தவந்த:) என்ற பதத்தினுல், தேஹங்களுக்கு நாசம் என்பது இயற்கையான தர்மம்என்று சொன்னபிறகு, அவைகளை சாச்வதமானவைகள் என்று எண்ண எவ்விதம் அவகாசம் ஏற்படும். தேஹம் நசிக்கும் ஸ்வபாவமுள்ளது தான். அதினுல் பீஷ்மர் முதலானவர்களுடைய தேஹமும் நசிக்கத்தான் போகிறது. அதற்கு நான் எதற்காக காரணம் ஆகவேண்டும் என்று எண்ணின

அர்ஜுனனுடைய இரண்டாவது பக்ஷத்தையும், "तस्माद्युध्यस्व भारत" "தஸ்மாத்யுத்யஸ்வ பாரத" என்ற வாக்யத்தால் பகவான் நிராகரிக்கிறார்.

அவ்விதமான நிராகரணப்ரகாரமோ; அர்ஜுனா, நீபரத வம்சத்தில் பிறந்தவனானதினால், மஹா க்ஷத்ரியனாக ஆகிறாய். க்ஷத்ரியனுக்கோ யுத்தம் என்பது ஸ்வதர்மமாகும். சத்ருக்களுடைய சரீரத்தை அழிக்க நாம் காரணமாக வேண்டாம் என்று நினைத்தால் ஸ்வதர்மத்யாகம் என்ற மஹாதோஷமல்லவா ஸித்திக்கிறது. அப்படி ஸ்வதர்மத்தைத்யாகம் செய்தவன் க்ஷத்ரியனாகவே ஆகமாட்டான். மஹாக்ஷத்ரியனாக எவ்விதம் ஆகப்போகிறான். ப்ராம்மணனுக்கு ஸோமயாகமானது விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த யாகத்தில் "பசு"வினுடைய ஆலம்பனமும் (ஹிம்ஸையும்) ஏற்படுகிறது. யாகம் செய்கிறவன் நான் அந்தப் பசுவின் சரீரம் நாசமடைவதற்கு, காரணமாக வேண்டாம் என்று நினைத்தால், அந்த ஸோமயாகத்தையேவிட்டு விடும்படி நேரிடும். அப்படியாகத்தை விட்டுவிட்ட ப்ராம்மணன், ப்ராம்மணனாக ஆகுவானா? ஸம்ஸ்காரங்களுக்குள் ஏழுவிதமான ஸோமஸம்ஸ்தை என்ற உத்தமமான ஸம்ஸ்காரத்தில் ஸோமயாகம் முக்யமானதல்லவா? அதை விட்டவனுக்கு ப்ராம்மண்யமே போய்விடும்.

அதுபோல் அர்ஜுனா க்ஷத்ரியனுக்கு யுத்தம் ஸ்வதர்மமாகும். அதில் சத்ருக்களுடைய சரீரங்களுக்கு அழிவு ஏற்படத்தான் ஏற்படுகிறது. அதற்கு நான் காரணம் ஆகவேண்டாம்என்று நீ நினைக்கலாமா? யுத்தம் உனக்கு விஹிதமல்லவா? விஹிதத்தை யனுஷ்டிக்காமலிருந்த காரணத்தினால் மஹாபாபமல்லவா ஏற்படும். மஹா க்ஷத்ரியனான உனக்கு அது அழகல்ல. ஆகையால் சத்ருக்களுடைய

சரீரங்கள் அழிவதில் நீ காரணமாகத் தான் ஆகவேண்டும். என்று சொல்லி, பீஷ்மர், முதலான சரீரங்கள் அழிவதற்கு நான் காரண மாக வேண்டாம்என்று சொன்ன அர்ஜுனனுடைய எண்ணத்தை யும் பகவான் மாற்றிவிட்டார்.

விசாரிக்கும் காலத்திலோ, ஆத்மாவோ அழியாமலிருக்கும் ஸ்வபாவமுள்ள வஸ்து. தேஹமோ எப்போதும் அழியும் ஸ்வபா வமுள்ளவஸ்து. அழியும் ஸ்வபாவமுள்ள தேஹத்தையும், அழி யாத ஸ்வபாவமுள்ள ஆத்மாவையும், ஒன்றுகக் கலந்துவிட்டு மூட லோகங்கள் அநர்த்தத்தை அனுபவிக்கின்றது. இதைத்தான் ஸ்ரீபரமாசார்யாளும் 'ப்ரம்ம ஸூத்ர சாங்கரபாஷ்ய" அத்யாஸ பாஷ்யத்தில், "सत्यानृते मिथुनीकृत्य अहं ममेदमिति नैसर्गिकोयं लोकव्यवहार:" ("ஸத்யாந்ருதே மிதுநீக்ருத்ய அஹம் மமேதமிதி நைஸர்கிகோயம் லோகவ்யவஹார:") என்ற வாக்யத்தால் ப்ரகாசப் படுத்தியிருக்கின்றார்கள். அழியும் ஸ்வபாவமுள்ள காரணத்தினால், அந்ருதமான (பொய்யான்) தேஹத்தையும், அழியாத ஸ்வபாவ முள்ள காரணத்தினால், ஸத்யமான ஆத்மாவையும் பிரித்து அனுப விக்கும் மஹான்களுக்கு துக்கமென்பதே இல்லையென்று நிச்சயமாகச் சொல்லலாம். அவர்கள் நித்யாநந்தத்தை அனுபவிப்பவர்களாகவே ஆகுவார்கள். அர்ஜுனனே ஆத்மா அநாத்ம தாதாத்ம்ய அத்யா ஸத்தினால் மோசம் போய், பீஷ்மாதிகளைக் குறித்து துக்கப்பட ஆரம்பித்து விட்டான். அதை நிவ்ருத்தி செய்வதற்கு பகவானும் ஆத்மஸ்வரூபம் நித்யமென்றும், தேஹாதிகள் அநித்யமென்றும், பிரித்து உரைத்தார். அர்ஜுனனுக்கு வ்யாமோஹமும் அநேக மாகப்போய்விட்டது. ஸ்வதர்மமாகிய யுத்தத்திலும் முன்போ லவே ப்ரவ்ருத்திக்க உத்ஸாஹமுள்ளவனாக ஆனான். ஆகிலும், அர்ஜுனனுக்கு ஒரு சந்தை ஏற்பட்டது.

அதாவது "க்ருஷ்ண, நான் பீஷ்மாதிகளைக் குறித்து துக்கப் படும்போது ஆத்மாவை குறித்து துக்கப்படுகிருயா, அல்லது தேஹத்தை குறித்தா? என்று இரண்டுவிதம் விகல்பம் செய்து கொண்டு நீயாகவே அதற்கு ஸமாதானமும் சொல்லிவிட்டாய். ஆத்மா நித்யமானதினுல் அதைக்குறித்து துக்கப்படுவது பண்டிதர் களுக்கு அழகல்ல என்றும், தேஹம் என்றைக்கும் அழியும் ஸ்வபா வமுள்ள காரணத்தினுல், அழிந்துதான் போகப்போகிறது, அதைப் பற்றியும் துக்கப்படுவது பண்டிதர்களுக்கு அழகல்ல, என்றும் சொல்லிவிட்டாய். இந்த விகல்பமோ, ஸமாதானமோ, என்புத் திக்கு த்ருப்தியைக் கொடுக்கவில்லை. ஏனென்றுல், தேஹத்தைக் காட்டிலும் ஆத்மா என்ற வஸ்து வேருக இருந்தால் ஆத்மாவா தேஹமா என்று விகல்பம் செய்யலாம். தேஹத்திற்கு வேருக ஆத்மா என்ற ஒரு வஸ்துவே இல்லை. தேஹம்தான் ஆத்மா. ஆத்மா தான் தேஹம். ஆகையால் முன்சொன்ன விகல்ப ஸமாதானத்திற்கு அவகாசமே இல்லை. தேஹத்தைக்காட்டிலும் ஆத்மா வேருக இருக்கிறது என்பதில் ப்ரமாண மூலமாக உன்னுல் ருஜுப்படுத்த முடியுமா" என்று அர்ஜுனனவன் தேஹாத்மவாதிகளான சார் வாகர்களுடைய மதத்தை அவலம்பித்து பூர்வபக்ஷம் செய்கிருன் அந்த பூர்வபக்ஷத்தின் ஸாராம்சமோ............

(தொடரும்)

# ஸ்ரீமத் பாகவதம்.

## ச்ருதிகீதை தொடர்ச்சி.

—o—

முன் ஸஞ்சிகையில் அறிவித்தபடி பரீக்ஷித்து மஹாராஜாவினுடைய ப்ரச்னத்திற்கு ஸர்வக்ஞனான சுகப்ரம்ம ஸ்வாமியானவர் பதில் அளிக்கின்றார் அதாவது,

**बुद्धीन्द्रियमनः प्राणान् , जनानां असृजत् प्रभुः ।**
**मात्रार्थंच भवार्थंच आत्मनेऽकल्पनायच ॥**

புத்தீந்த்ரியமந: ப்ராணான், ஜநாநாம் அஸ்ருஜத் ப்ரபு: ।
மாத்ரார்த்தம்ச பவார்த்தம்ச ஆத்மநேऽகல்பநாயச ॥

என்ற ச்லோகத்தால் சுகப்ரம்ம ஸ்வாமியானவர் வேதங்களெல்லாம் பரப்ரம்ம பரம் தான் என்பதை உபதேசிக்கின்றார். இந்த ச்லோகத்தின் பதவுரையோ,

**प्रभुः** (ப்ரபு:) = ஸ்வதந்த்ரனான ஈச்வரன்
**जनानां** (ஜனானாம்) = ஜீவகோடிகளுக்கு
**मात्रार्थंच** (மாத்ரார்த்தம்ச) = விஷயங்களைக்ரஹித்து அனுபவிப்பதற்காகவும்
**भवार्थंच** (பவார்த்தம்ச) = பிறப்புமுதல் கர்மாக்களை செய்வதற்காகவும்
**आत्मने** (ஆத்மநே) = ஆத்மாவுக்கு அந்தந்த லோகங்களில் திவ்யபோகங்கள் ஸித்திப்பதற்காகவும்,

अकल्पनायच (அகல்பநாயச) = ஸகலவிதமான கல்பனைகளும் அற்றுவிளங்கிவரும் மோக்ஷம் ஸித்திப்பதற்காகவும்,

बुद्धीन्द्रियमनः प्राणान् (புத்தீந்த்ரிய மந: ப்ராணான்) = புத்தி, இந்த்ரியங்கள், மனது ப்ராணன் இதுகளை

असृजत् (அஸ்ருஜத்) = ஸ்ருஷ்டித்தார்

தாத்பர்யம்:— இந்த ச்லோகத்தினல் உத்தரார்த்தத்திலுள்ள நான்கு பதங்களைக்கொண்டு நான்கு விதமான புருஷார்த்தங்கள் ப்ரகாசப்படுத்தப்படுகின்றன. मात्रार्थं (மாத்ரார்த்தம்) என்பதினல் मीयन्ते इति मात्राः (மீயந்தே இதி மாத்ரா:) என்ற ஸமாஸத்தைக்கொண்டு இந்த்ரியங்களால் அறியப்படுகிற சப்தாதி விஷயங்களையே க்ரஹித்துக்கொள்ளவேண்டும். சப்தாதி விஷயங்கள் தான் அர்த்தம் என்ற புருஷார்த்தமானதால், मात्रार्थं (மாத்ரார்த்தம்) என்ற பதத்தினல் 1 அர்த்தம் என்ற புருஷார்த்தமானது வெளியாகிறது. भवार्थं [பவார்த்தம்] என்ற பதத்தால் ஜன்மம் முதல் செய்யவேண்டிய ஸத்தர்மங்களைக் காட்டுகிற படியால், அந்தபதத்தினல் 2 धर्मं தர்மம் என்ற புருஷார்த்தம் வெளியாகிறது. आत्मने [ஆத்மநே] என்ற பதத்திற்கு लोकान्तरगामिने, आत्मनः तत्तल्लोकभोगायेत्यर्थः என்ற ஸ்ரீதர ஸ்வாமிகளுடைய வ்யாக்யானத்தை யனுஸரித்து அந்த பதத்தினல் போகமாகிய 3 கர்மம் என்ற புருஷார்த்தம் வெளியாகிறது. अकल्पनाय [அகல்பனய] என்ற பதத்தினல், ஸமஸ்தமான கல்பனைக்கும் அதிஷ்டானமாகத் தானிருக்கும் காரணத்தினல்தான் கல்பனைக்கு விஷயமாகாமலே, ஸச்சிதானந்தரூபமாக விளங்கிவரும் பரப்ரம்ம பாவம் என்ற மோக்ஷம் என்ற புருஷார்த்தம் வெளியாகிறது. அதனல் அறம், பொருள் இன்பம், வீடு, என்று தென்மொழியில் சொல்லப்படும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று வடமொழியில் சொல்லப்படுவதாயுமுள்ள நான்கு புருஷார்த்தங்களையும் ஜீவகோடிகள் அடைவதற்காகத்தான் அந்த ஜீவகோடிகளுக்கு புத்தி, இந்த்ரியம், மனது, ப்ராணன் என்ற

நான்கு ஸாதனங்களை ஈச்வரன் கருணையால் ஜீவகோடிகளுக்கு ஸ்ருஷ்டித்துக் கொடுத்திருக்கிறார்.

இதனால், அர்த்தம் என்ற புருஷார்த்தத்தை அடைவதற்கு இந்த்ரியங்களும் தர்மம் என்ற புருஷார்த்தத்தை யடைவதற்கு புத்தியும், காமம் என்ற புருஷார்த்தத்தை யடைவதற்கு மனதும், மோக்ஷம் என்ற புருஷார்த்தத்தை யடைவத்ற்கு ப்ராணனும், ப்ரதானமான ஸாதனங்கள் என்பதையும் அறியவும். சப்தம் முதலான விஷயங்களே அர்த்தமானதினால், அவைகளை க்ரஹித்து அனுபவிப்பதற்கு இந்த்ரியங்கள் தான் முக்யமான ஸாதனங்களானதினால், இந்த்ரியங்களாலேதான் அர்த்தம் என்ற புருஷார்த்தம் அடையப்படுகிறது. ஸத்கர்மானுஷ்டானங்களைச் செய்தால் தான் தர்மம் என்ற புருஷார்த்தம் ஸித்திக்கிறதினாலும், அந்த ஸத்கர்மானுஷ்டானங்களைச் செய்வதில் வேதாத்யயனம் செய்து அதை மறக்காமல் தாரணசக்தியோடு கூடின புத்திமானான புருஷனே அதிகாரியானதினாலும், புத்தியே தர்மம் என்ற புருஷார்த்தத்திற்கு ஸாதனமாகும். அந்தந்த லோகங்களில் அமானுஷமான போகங்களை அனுபவிப்பதே காமம் என்ற புருஷார்த்தமானதினாலும், அந்தந்த லோகங்களில் கமனகமனமானது (போக்கு வரவு) லிங்கசரீரமாகிய மனதினுடையது என்று சாஸ்த்ர ஸித்தாந்தமானதினாலும், காமம் என்ற புருஷார்த்தத்திற்கு மனதுதான் ஸாதனமாகும். ஸ்ரீமத் பாகவதத்தில் பக்தியை ப்ரதானமாக சொல்லப்பட்டிருப்பதினாலும் அந்த பக்தியானது ஸகுணப்ரம்ம உபாஸன ரூபமானதாலும், ஸகுணப்ரம்ம உபாஸகர்களுக்கு தேவயான மார்க்கமாக க்ரமமுக்தியை பலனாக சாஸ்த்ரங்களில் சொல்லியிருப்பதினாலும், அந்த க்ரம முக்திக்கு உபாஸகர்களுடைய நிர்யாண (ப்ராணன் போகும்) காலத்தில் **तयोर्ध्वमायन् अमृतत्वंएति** (தயோர்த்வமாயன் அம்ருதத்வம் ஏதி) என்ற ச்ருதியால் ஸுஷும்ன நாடிவழியாக ப்ரம்ம ரந்த்ரத்தை பேதித்துக்கொண்டு ப்ராணனுடைய நிர்க்கமனத்தை ஸூசகமாக (அறிகுறியாக) சொல்லியிருப்பதினாலும், உபாஸகர்களுக்கு, ப்ராணனே முக்திக்கு ப்ரதானமான ஸாதனம் என்று

தெரிகிறது. இதனால் மோக்ஷம் என்ற புருஷார்த்தத்திற்கு ப்ராணன் தான் ஸாதனமாகும்.

இவ்விதம், ஸர்வேச்வரனான பகவான் ஜீவகோடிகள் நான்கு விதமான புருஷார்த்தங்களையும் அடையவேண்டுமென்ற, மேற்சொன்ன நான்கு ஸாதனங்களையும் ஸ்ருஷ்டித்துக் கொடுத்திருக்கிறார் என்று மேற்கூறிய ச்லோகத்தின் தாத்பர்யம் வெளியாகிறது. இவ்விதம் பகவான் செய்திருக்கும் உபகாரத்தை அறிந்த ஜீவகோடிகள் எக்காலத்திலும் த்ரிவிதமான காரணங்களினாலும் அந்த பகவானை பக்தி பண்ணாமலிருக்க ந்யாயமே இல்லை யென்றும் வெளியாகிறது.

தவிரவும், **मात्रार्थं** [மாத்ரார்த்தம்] என்ற பதத்தினால் **मीयन्ते आभिः गुणकार्याणि गुणातीतंचपरं तत्वं** (மீயந்தே ஆபி: குணகார்யாணி குணாதீதம்ச பரம் தத்வம்) என்று ஸமாஸம் செய்திருக்கும் வ்யாக்யானத்தை யனுஸரித்து ஸத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்ற மூன்று குணங்களையே சரீரமாக உடைத்தான மாயையின் கார்யமான ப்ரபஞ்சத்தின் உண்மையும், மாயாவிலக்ஷணனாக இருக்கும் காரணத்தினால், குணாதீதனாக இருக்கும் பரப்ரம்மத்தின் உண்மையும், எந்த ச்ருதிகளால் அறியப்பட்டதாக ஆகுமோ அந்த வேதவாக்யங்களே **मात्रा** மாத்ரா என்ற பதத்தால் சொல்லப்படுகின்றன. இதனால் **मात्रार्थं** (மாத்ரார்த்தம்) என்ற பதத்தால் வேதாத்யயனம் செய்வதற்கு என்ற பொருள் வெளியாகிறது. இதனால் வேதாத்யயனம் செய்வதற்காகத்தான், பகவான் புத்தியை ஸ்ருஷ்டித்தார் என்பது வெளியாகிறது. அவ்விதம் அத்யயனம் செய்யப்பட்ட வேதத்தில் சொல்லியிருக்கும் கர்மாக்களை செய்வதற்காகவே இந்த்ரியங்களை ஈச்வரன் ஸ்ருஷ்டித்தார். அந்த இடத்தில் **भवार्थं** (பவார்த்த) என்ற பதத்திற்கு **अभ्युदयप्राप्त्यर्थं** (அப்யுதயப்ராப்த்யர்த்தம்) அதாவது புண்ய கர்மாக்களைச் செய்துதான் க்ஷேமத்தையடைவதற்காக என்ற அர்த்தத்தை க்ரஹித்துக்கொள்ளவேண்டும். அப்படி வேதத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களோ பாஹ்யம்,

ஆந்தரம் என்று இரவகைப்படும். அக்னிஹோத்ரம் முதலானது களே பாஹ்யமாகும். ஸகுணப்ரம்ம உபாஸனம் ஆந்தரமாகும். பாஹ்யமான அக்னிஹோத்ராதிகளைச் செய்த புண்யவான்களுக்கு ஸ்வர்க்கலோகம் சென்று திவ்ய ஸுகங்களை யனுபவிப்பதற்காக மனதையும்; ஸகுணப்ரம்ம உபாஸனம் என்ற ஆந்தரமான கர்மாவைச் செய்து உபாஸகர்களான மஹான்களுக்கு அர்ச்சிராதி மார்க்கமாக க்ரமமுக்தியை அடைவதற்கு ப்ராணனையும் ஸாதன மாக அறிந்துகொள்ளவேண்டும்.

இதனால், ஈச்வரன் ஜீவகோடிகளுக்கு கொடுத்திருக்கும் ஒவ் வொரு அவயவங்களும் ஜீவனுடைய க்ஷேமார்த்தம்தான் என்றே அறியவேண்டும். ஜீவனுக்காக என்று சொன்னதினால், ஈச்வரன் அவாப்தஸமஸ்த காமனானபடியால், ஸ்ருஷ்டி முதலானதுகளில் ஸ்வப்ரயோஜனத்தை உத்தேசித்து ப்ரவ்ருத்திக்கவில்லை, என்ற தை அறியவும். ஜீவனுடைய ப்ரயோஜனத்தை உத்தேசித்து ஸ்ருஷ்டி முதலானதுகளில் ஈச்வரனுக்கு ப்ரவ்ருத்தி வரும்போது அந்த ஈச்வரனும் மாயா ஸபலிதனாகத்தான் இருக்கவேண்டும். ஆகிலும், அந்த மாயை என்ற உபாதிக்குத்தான் வச்யமாக (உள்பட்டவனாக) இருக்கிறதில்லை அந்த மாயை என்ற உபாதி யைத் தான் தனக்கு வசமாக்கிக்கொண்டே வருகிறான் அவன் ஸ்வதந்த்ரன் தான் என்பதை प्रभुः ப்ரபு: என்ற பதத்தினால் அறிந்து கொள்ளவேண்டும்.

ஒரு புத்திமானான புருஷன் அக்னிஹோத்ரம் முதலான ச்ரௌத கர்மாக்களைச் செய்வதில் தான் கர்த்தாவாக ஆகவேண்டுமே யானால் தர்மபத்னியினுடைய ஸம்பந்தமில்லாத போனால் முடி யாததே. அதற்காக தர்மபத்னீ என்ற உபாதியோடு இவன் கூடிக் கொண்டிருக்கும்போது அந்த புத்திமானான புருஷன் அந்த தர்ம பத்னீக்கு தான் வச்யனாக ஆகிறதில்லை. அவளைத்தான் தனக்கு வச்யையாக செய்து கொள்கிறான். அதுபோல் பரப்ரம்மமானது ஜீவகோடிகளுடைய ப்ரயோஜனத்திற்காக புத்தி முதலானதுகளு டைய ஸ்ருஷ்டியில் ப்ரவ்ருத்திக்க வேண்டுமானால் மாயா ஸம்பந்த மில்லாத போனால் முடியாது. அதற்காக மாயை என்ற உபாதிக்கு வச்யனாக ஆகிவிடுகிறானோ என்று நினைக்கக்கூடாது. அந்த மாயை யைத்தான், தானே ஆட்டிவைக்கிறான் என்பதை அறியவும்.

மேற்சொன்ன ச்லோகத்தின் தாத்பர்யமானது, இன்னது தான் என்பது வெளியாய்விட்டது. ஆனல் பரீக்ஷித்து மஹாராஜாவினுடைய கேள்வைக்கு இந்த ச்லோகத்தின் மூலமாக என்ன விதமான விடை சுகப்ரம்ம ஸ்வாமி அளித்தார் என்பது வெளியாகவில்லை. பரீக்ஷித்து மஹாராஜாவின் ப்ரச்னமோ, ஜாதி, குணம், க்ரியை, ஸம்பந்தம் என்றது முதலான யாதொரு ஸம்பந்தமில்லாத பரப்ரம்மத்தினிடத்தில், ஜாதி, குணம், க்ரியை, ஸம்பந்தம், முதலானதுகளுக்குந் ஏதாவதொன்றை அபேக்ஷித்துத்தான், தானொரு பொருளை ப்ரகாசப்படுத்தி வைக்கும் ஸ்வபாவமுள்ள சப்தரூபமான வேதங்கள் எவ்விதம் ஸஞ்சரிக்கும் என்றது என்பதை தான் முன் ஸஞ்சிகையில் சொல்லப்பட்டிருக்கிறது.

அதற்கு பதிலளிக்க ஆரம்பிவித்த சுகப்ரம்ம ஸ்வாமியோ ஜீவகோடிகளுக்கு தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், என்ற நான்கு விதமான புருஷார்த்தங்களை அடைய புத்தி இந்த்ரியம், மனது, ப்ராணன் என்ற நான்கு விதமான முக்ய ஸாதனங்களை ஸ்ருஷ்டித்துக் கொடுத்திருக்கிறார். அந்த ஈச்வரனே ஸர்வஸ்வதந்த்ரன் என்று தான் சொல்லியிருக்கிறார். இந்த பதில் பரீக்ஷித்து மஹாராஜாவினுடைய கோள்வைக்கு தகுந்த பதிலாக ஆகுமாஎன்று ஸந்தேஹிக்கிற ஜனங்களுக்கும், வேதமானது ப்ரம்மத்தை எப்படி சொல்ல ப்ரவ்ருத்திக்கும் என்ற ரீதியை இந்த ச்லோகமே எப்படி ப்ரகாசப்படுத்தியது என்பதை அடியிற்கண்டவாறு அறியவும்:— கீழேகாணப்படும் அபிப்ராயம் **अयं अभिप्रायः** (அயம் அபிப்ராய:) என்று ஆரம்பித்துக்கொண்டு ஸ்ரீதராசார்யாள் கம்பீரமாக உபந்யஸித்திருக்கும் ப்ரஸங்கத்திற்கு ஸரியான தமிழ் என்றதையும் அறியவும். அதாவது:—

(தொடரும்)

# ஸ்ரீமத் ராமாயணம்.

ஸாக்ஷாத் ஸ்ரீராமபிரானுக்கும் ஸீதாதேவிக்கும் நடந்த விவாஹ மஹோத்ஸவத்தை விளக்கும் ச்லோகத்தின் தாத்பர்ய மானது, வாச்யமாகவும், வ்யங்க்யமாகவும் வர்ணிக்கப்பட்டது. ஜனக மஹாராஜாவானவர் ஸீதாதேவியை ஸ்ரீராமனுக்கு கன்யாதான விதியை யனுஸரித்து கல்யாணம் செய்து கொடுத்தது போலவே, ஸ்ரீராமனுடைய தம்பியான லக்ஷ்மணஸ்வாமிக்கு, ஜனகமஹாராஜா தன்னுடைய ஔரஸ (தனக்குப் பிறந்த) புத்ரியான ஊர்மிளா தேவி யையும், அவ்விதமே தன்னுடைய தம்பியான குசத்வஜன் என்ற மஹாராஜாவினுடைய கன்னிகைகளான மாண்டவி, ச்ருதகீர்த்தி என்ற இரண்டு பெண்மணிகளையும் பரதனுக்கும், சத்ருக்னனுக்கும் க்ரமமாக கல்யாணம் செய்து கொடுத்தார். கல்யாண தினத்தன்றே விச்வாமித்ர மஹர்ஷியானவர் தசரதசக்ரவர்த்தியின் குமாரர்க ளான நான்கு பேர்களுக்கும் பரிபூர்ணமான ஆசிர்வாதம் செய்து விட்டு, தான் தபஸ் செய்வதற்காக சென்றுவிட்டார்.

தசரதசக்ரவர்த்தியும், விவாஹ மங்களம் முடிந்த பிறகு ஜனக மஹாராஜாவினல் பக்தியோடு கொடுக்கப்பட்ட கல்யாண சீர் சாமான் வகையருக்களை பெற்றுக்கொண்டு, நான்கு குமாரர்களுட னும் அயோத்யா நகரத்திற்கு புறப்பட்டார். நடுமார்க்கத்தில் ஜமதக்னி மஹர்ஷியினுடைய குமாரனை பரசுராமனுக்கும் ஸ்ரீராம பிரானுக்கும் நடந்த யுத்த ஸமயத்தில், அதிலும் பரசுராமன்,

ஸ்ரீராமனோடு பேசும் காலத்தில் பரமசிவனைக் காட்டிலும் விஷ்ணு வானவர் மேலான தேவதை என்று காட்டக்கூடிய ச்லோகத்தின் உண்மையை இந்த ஸஞ்சிகையில் விசாரிப்போம் அந்த ச்லோகமோ;

जृम्भितं तद्धनुर्दृष्ट्वा शैवं विष्णुपराक्रमैः ।
अधिकं मेनिरे विष्णुं, देवाः सर्षिगणास्तदा ॥

ஜ்ரும்பிதம் தத்தநுர்த்ருஷ்ட்வா சைவம் விஷ்ணுபராக்ரமை: ।
அதிகம் மேநிரே விஷ்ணும், தேவா: ஸர்ஷிகணாஸ்ததா ॥

என்றதே தானாகும்.

பரசுராமன் ஸ்ரீராமபிரானைப் பார்த்துச்சொல்கிறார். அதாவது "ராமா, ஜனகமஹாராஜாவினுடைய ஸபையில் சிவதனுஸ்ஸை முறித்தவன் என்றவன் நான்என்ற அஹங்காரம் உனக்கு வேண்டாம். முன்காலத்தில் தேவாளுக்கு, ஹரி, ஹராளுக்குள்ளே, யார்மேலான தெய்வம் என்று தெரிந்துகொள்ள ஆவல் ஏற்பட்டது. உடன் விச்வகர்மாவை யழைத்து இரண்டு உயர்ந்த வில்களை நிர்மாணம் செய்யச் சொன்னார்கள். இந்த இரண்டில் ஒன்றை சிவனிடத்திலும், ஒன்றை விஷ்ணுவினிடத்திலும் கொடுத்துவிட்டு அவ்விருவர்களுக்கும் பெரிய யுத்தம் ஏற்படும் படிக்கும் செய்து விட்டார்கள். அவ்விதம் வெகுகாலம் போர்நடந்து கொண்டிருக்கும் பொழுது, மஹாவிஷ்ணுவினுடைய ஹுங்காரத்தினால், பரமசிவன் ஸ்தம்பித்துப்போய் அபஜயத்தை அடைந்து விட்டார். அப்போது மஹாதேவசப்தமானது மஹாவ்ருக்ஷம் என்ற சப்தத்திற்கு ஸமானமாக ஆகிவிட்டது. அவர் கையிலிருந்த வில்லும் முறிந்துவிட்டது. அப்போது தேவர்கள், மஹர்ஷிகள் எல்லோரும் ஒன்றுகூடிச் சேர்ந்து மஹாவிஷ்ணுதான் பராக்ரமத்திலோ, ஞானத்

திலோ மற்ற ஸகலவிதமான கல்யாண குணங்களிலோ, மேலான பொருள் என்று தீர்மானம் செய்துவிட்டார்கள், என்று பரசுராமன் ஸ்ரீராமனிடம், சொல்லியிருக்கும் வார்த்தைகளில், சிவபக்தி இல்லாதவர்களுக்கு பரம ஸந்தோஷம் ஏற்பட்டு அதை ஒன்றுக்கு பத்தாக இவர்களே வ்யாக்யானம் செய்துகொண்டு, சிவபக்தசிரோமணிகளை அல்பபுத்தியோடு கூடினவர்களாகவும் நினைத்து பரிஹாஸமும் செய்கிறார்கள்.

அதனுடைய உண்மை எப்படியென்று விசாரிக்கவேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. பரசுராமன் ஸ்ரீராமனைப் பார்த்துச் சொல்லும்போதே

**त्रिपुरघ्नं नरश्रेष्ठ भग्नं काकुत्स्थयत्वया ।**

(த்ரிபுரக்கம் நரச்ரேஷ்ட பங்நம் காகுத்ஸ்தயத்வயா)

என்ற வாக்யத்தால் ஸ்ரீராமனை நரச்ரேஷ்டன் என்று ஸம்போதனம் செய்துகொண்டு ராமா, ஜனக மஹாராஜாவினுடைய ஸபையில் உன்னால் முறிக்கப்பட்ட வில்லோ, ஸாமான்யமான தனுஸ்ஸல்ல. பரமசிவன் எந்த தனுஸ்ஸை வைத்துக்கொண்டு த்ரிபுராஸுரர்களை ஸம்ஹரித்தாரோ, அப்பேர்ப்பட்ட தனுஸ் அது என்று சொல்கிறார். இதனால், அளவற்ற பராக்ரமசாலிகளாயும், தேவாஸுரர்களால் ஜயிக்க முடியாதவர்களாயும் இருக்கும் த்ரிபுராஸுரர்களைக்கூட வதம் செய்து, லோகத்திற்கு க்ஷேமத்தை உண்டு பண்ணினவர் பரமசிவக்கடவுளே என்று பரமசிவனுடைய பரதத்வமும் பரசுராமனுடைய வாக்கினாலேயே, ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு விரோத மில்லாமலே, **जृम्भितं तद्धनुर्दृष्ट्वा** (ஜ்ரும்பிதம் தத்தநு ர்த்ருஷ்ட்வா) என்ற ச்லோகத்திற்கு அர்த்தத்தை வர்ணிக்கவேண்டும். அவ்விதம் விரோத மில்லாமலிருக்கும் அர்த்த

மோ, த்ரிபுராஸுரர்களைக் கொன்றதிலிருந்து பரமசிவனை உத்க்ருஷ்டமான தெய்வம் என்று, தேவகோடிகளெல்லோரும் தீர்மானித்திருந்தார்கள். அதுபோல் விஷ்ணுவை உத்க்ருஷ்ட தேவதை யென்று தீர்மானிக்க, வேறு ஒரு ஸமயமும் ஏற்படவில்லை. விஷ்ணுவுக்கும் சிவனுக்கும், யுத்தம் நடக்கும்போது, பரமசிவனுடைய கையிலிருந்த தனுஸ்ஸானது விஷ்ணுவினுடைய ஹுங்காரத்தினல் முறிந்தவுடன், விஷ்ணுவையும் உத்க்ருஷ்டமான தெய்வம்தான் என்று தீர்மானித்தார்கள். அந்த இருவர்களுக்குள் ஒருவர் கீழ், ஒருவர் மேல் என்று தீர்மானித்தார்கள் என்று அந்த ச்லோகத்திற்கு அர்த்தம் சொல்லமுடியாது. சிவனை ஒரு ஸமயத்தில் மேலான தெய்வம் என்று தீர்மானித்தார்கள். மற்றொரு ஸமயத்தில் அவ்விதமே விஷ்ணுவையும் மேலான தெய்வம் என்று தீர்மானம் செய்தார்கள். ஆகையால் இருவர்களும் ஸமானமான தேவதைகளே என்று தான் அறியவேண்டும். த்ரிபுராஸுரர்களோடு பரமசிவன் யுத்தம் செய்யும்போது, மஹாவிஷ்ணுவானவர் அபகர்ஷத்தை (தாழ்மை)த்தான் அடைந்திருந்தார். பரமசிவனுக்குத்தான் உத்கர்ஷபாவம் ஏற்பட்டிருந்தது. அதை எந்த வாதிகளும் தடுக்கமுடியாது. விஷ்ணுவுக்கு அபகர்ஷமும், சிவனுக்கு உத்கர்ஷமுமுள்ள அந்தக் கதையை நம்பாமல் சிலர்கள் முரட்டுப் பிடிவாதம் பிடித்தால், சிவனுக்கு அபகர்ஷத்தையும் விஷ்ணுவிற்கு உத்கர்ஷத்தையும் சொல்கிற இந்த இராமாயண கதையை யார்தான் நம்புவார்கள்.

அத்துடன் த்ரிபுராஸுரவதத்தில் பரமசிவனுடைய வில்லுக்கு மஹாவிஷ்ணுவானவர் பாணமாக இருந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாணத்திற்கு ப்ராதான்யமா ? பாணத்தை தொடுக்

கிற வில்லாளிக்கு ப்ராதான்யமா? இதை சொல்லியிருக்கும், கவியானவர் ஸாமான்யமானவரா. ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவினுடைய அம்சாவதாரமாகிற வேதவ்யாஸர்தான்.

मौर्वी मूर्ध्निरथः शरासनशिरस्संचारि चक्रद्वयं चक्रान्तर्निहितश्शरः
तदुदरे सूतः तदास्ये हयाः ।

तेषामेव शिरःपदेषु वसतिः स्वस्येति यस्यश्रुतं देवः चित्रपरिच्छदः
सभगवान् कुर्यात् सदामंगळम् ॥

என்று வ்யாஸாசார்யாள் பரமசிவன் த்ரிபுராஸுரர்களோடு யுத்தம் செய்யும் காலத்திலுள்ள பெருமையை வர்ணித்திருக்கிறார். பூமிதேவியானவள் ரதமாகவும், சந்த்ர ஸூர்யாள் இரண்டு சக்ரங்களாகவும் மஹாமேருபர்வதம் வில்லாகவும், ஸூர்யமண்டலத்தின் நடுவிலுள்ள ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் பாணமாகவும், ப்ரம்மாவானவர் ஸாரதியாகவும் நான்கு வேதங்கள் குதிரைகளாகவும், த்ரிபுரவதத்தில் பரமசிவனுக்கு யுத்தபரிகரமாக விளங்கிவந்தது. அந்த பரமசிவன்தான் வேதாந்த வேத்யன் அந்த ப்ரபுவானவன் ஸர்வ விதமான மங்களத்தையும் கொடுக்கட்டும், என்றுதான் இந்த ச்லோகத்தின் தாத்பர்யமாகும்.

இவ்விதம் த்ரிபுராஸுரயுத்த காலத்தில் பரமசிவனுக்கு பாணமாக இருந்து அபகர்ஷத்தை அடைந்துவந்த மஹாவிஷ்ணுவிற்கு தானும் ஒரு ஸமயத்தில் அபகர்ஷத்தை அடையவேண்டும் என்று நினைத்த பரமசிவன் விஷ்ணுவினுடைய ஹுங்காரத்தினால் தன் கையிலிருந்த வில்லு முறிந்தகாரணத்தினால் விஷ்ணுவிற்குத்தானும் அபகர்ஷத்தை அடைந்து விஷ்ணுவினுடைய உத்கர்ஷத்தையும் ப்ரகாசப்படுத்தினார். இந்த விஷ்ணு அபகர்ஷத்தை அடைந்து

அந்த பரமசிவனுக்கு உத்கர்ஷத்தை ப்ரகாசம் செய்து உபகாரம் செய்தாரா அல்லவா, அதுபோல் பரமசிவனும் மஹாவிஷ்ணுவிற்கு ப்ரத்யுபகாரம் செய்தார். தேவரஹஸ்யத்தை யார்தான் அறிய முடியும்! அந்தந்த புராணத்தில் அந்தந்த தேவதையைத்தான் மேலாகச்சொல்லும். புராணத்தின் மார்க்கமே அதுதான். அதிஞல் ஒன்று மேல், ஒன்று கீழ் என்று நினைக்கக்கூடாது. எல்லா தெய்வங்களும் ஸமானமான வைபவங்களோடு கூடினவர்களே. ஒரே அகண்டமான பரப்ரம்மம்தான், வ்யவஹாரதசையில் வெவ்வேறு தேவதைகளைப் போல் தோன்றுகிறது. அதில்,

त्वन्मायया संवृत चेतसस्त्वां पश्यन्ति नाना नविपश्चितोये ॥

த்வந்மாயயா ஸம்வ்ருத சேதஸஸ்த்வாம் பச்யந்தி நாநா நவி
பஸ்சிதோயே ॥

என்ற ஸ்ரீமத் பாகவத வசனமே ப்ரமாணமாகும். தேவகியினுடைய கர்ப்பத்தில் ஸ்ரீபகவான் வஸிக்கும்போது, ப்ரம்மாதி தேவர்கள் வந்து சேர்ந்து ஸ்துதிக்கும் ச்லோகங்களில் இந்த ச்லோகம் ஒன்ருகும். ஏ பகவன், உன் மாயையினுலே மூடப்பட்ட அவிவேகிகள் தான் உன்னை அநேக ரூபமாகப் பார்ப்பார்களே தவிர. எவர்கள் வித்வான்களோ அவர்கள் உன்னை ஒரே ரூபமாகத்தான் பார்ப்பார்கள், என்றும் அந்த ச்லோகத்தின் தாத்பர்யத்தை அறியவும்.

ஆகையால் விஷ்ணுவோ, சிவனே இரண்டும் ஒரே தத்வம் தான். த்வேஷபுத்தியே முமுக்ஷுக்களுக்கு முற்றிலும் கூடாது. தவிரவும், **अधिकं मेनिरे विष्णु** (அதிகம் மேநிரே விஷ்ணும்) என்ற இடத்தில் விஷ்ணுவை தேவர்களும், ரிஷிகளும், உத்க்ருஷ்டமாக

நினைத்தார்கள். அந்த உத்கர்ஷதையின் நிச்சயத்திற்கு, னுடைய கையிலிருந்த வில்லானது, விஷ்ணுவினுடைய காரத்தினால், முறிந்ததே காரணமாகும். அந்த உத்கர்ஷ நிச்சயத்தால், இதற்கு முன் விஷ்ணுவினிடத்தில் தேவர்களு ரிஷிகளுக்கும் அபகர்ஷதையின் ப்ரமம் இருந்தது. இந்த விதமா உத்கர்ஷதா நிச்சயத்தினால் மேற்சொன்ன ப்ரமம் நிவ்ருத்தியடை ததே தவிர, சிவனிடத்தில் ஒரு அபகர்ஷதையை அந்த நிச்சய மானது உண்டுபண்ணாது. ஞானமானது தனக்கு விரோதியான அக்ஞானத்தை துலைக்குமே தவிர, மற்றொரு இடத்தில் உத்சர்ஷ தையையோ, அபகர்ஷதையையோ உண்டுபண்ணாது. அதனால்தான் இந்த ச்லோகத்தில் விஷ்ணுவை அதிகமாக நினைத்தார்கள் என்று மட்டும் சொல்லியிருக்கிறதே தவிர, சிவனைக்காட்டிலும் என்று பதம் இல்லை. தேவர்களுக்கோ, ரிஷிகளுக்கோ, இந்த மாதிரி சிவ னுக்கும், விஷ்ணுவுக்கும் யுத்தம் ஏற்படுவதற்கு முந்தி, விஷ்ணு ஒரு ஸாமான்ய தேவதை என்ற எண்ணமிருந்தது இந்த யுத்தத்திற்கு பிறகு, விஷ்ணுவை நாம் அவ்விதம் நினைத்தது பிசகு. விஷ்ணுவும் உத்க்ருஷ்டமான தேவதைதான் என்ற எண்ணம் உதயமாயிற்று. இதன்னியில், சிவனை கீழான தேவதை என்று சொல்ல அந்த ச்லோகம் ஆரம்பிக்கவில்லை. விஷ்ணுவை அதிகமாக எண்ணினார் கள் என்பதற்கு எதைக்காட்டிலும் என்ற கேள்வை ஒன்று ஏற்படுமே, அதற்கு ஸமாதானமாக வ்யாக்யானந்தரத்தில்,

**स्वीय पूर्वज्ञानविषयस्वरूपापेक्षया अधिकं इत्यर्थः ॥**

॥ஸ்வீய பூர்வக்ஞாநவிஷயஸ்வரூபாபேக்ஷயா அதிகம் இத்யர்த:॥

என்று ஸ்பஷ்டமாக காணப்படுகிறது. ஆனால் பரமசிவனை மேல் என்று நினைப்பதற்கு த்ரிபுராஸுரவதம் என்ற ஒரு ஸந்தர்ப்பம்

போல், இதுவரையில் விஷ்ணுவையும் மேல் என்று ருவித ஸந்தர்ப்பமும் ஏற்படவில்லை. ஆகையால் இந்த ஷ்ணுவை மேலாக நினைத்தார்கள்.

ஆகையால் விஷ்ணுவோ, சிவனோ, இருவர்களுக்குள், ஒருவர் ஒருவர் கீழ் என்பதே கிடையாது. உண்மையிலேயே சிவ விஷ்ணுவும் யுத்தம் செய்யும் காலத்தில், சிவன் பராஜயத்தை டைந்திருந்தால், பராஜயத்தை அடைந்த பரமசிவனிடத்தில் பாய், தேவர்களும் ரிஷிகளும் யுத்தத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று யாசிக்க ந்யாயமில்லையே. ஜயத்தை அடைந்த விஷ்ணுவைத்தானே எல்லோரும் போய் யுத்தத்தை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று யாசிக்கவேண்டும். அடிக்கிறவனைக் கெஞ்சவேண்டுமே தவிர, அடிபட்டவனை யாசிப்பதுண்டா? இது லாக ப்ரஸித்தமான விஷயம். ப்ரக்ருதத்திலோ,

देवैस्तदा समागम्य सर्षिसङ्घैः सचारणैः ।
याचितौ प्रशमंतत्र जग्मतुः तौसुरोत्तमौ ॥

தேவைஸ்ததா ஸமாகம்ய ஸர்ஷிஸங்கை: ஸசாரணை:
யாசிதௌ ப்ரசமம்தத்ர ஜக்மது தௌஸுரோத்தமௌ

என்ற ச்லோகமும் ராமாயணத்திலேயே காணப்படுகிறது. தேவர்களும் ரிஷிகளும் சிவன் விஷ்ணு இருவர்களையும் ப்ரார்த்தித்து யுத்தத்தை நிறுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டதிலிருந்து தேவச்ரேஷ்டர்களான அந்த இருவர்களும் உபரதியை அடைந்தார்கள் என்று அந்த ச்லோகத்தின் தாத்பர்யமாகும். சிவனும் விஷ்ணுவும் ஸமானமான யோக்யதை யுள்ளவர்கள் தான் என்பதற்கு இந்த ஒரு அத்தாக்ஷியே போதாதா? ஆகையால் தேவதை விஷயத்தில் மேல் கீழ் என்ற பாவத்தை விட்டுவிட்டு, ஒரே அகண்டமான வஸ்து தான் வ்யவஹாரதசையில் பல தேவதைகளைப் போல் தோன்றுகிறது என்றது தான் சாஸ்த்ர ஸம்மதமான ரஹஸ்யம்.

(தொடரும்)

# ஸௌந்தர்யலஹரீ.

7வது ச்லோகம்:—

**क्वणत्काञ्ची दामा करिकलभ कुम्भस्तननता**
**परिक्षीणा मध्ये परिणत चरच्चन्द्रवदना।**
**धनुर्बाणान् पाशं सृणिमपि दधानाकरतलैः**
**पुरस्तात् आस्तां नः पुरमथितुः आहोपुरुषिका॥**

(க்வணத் காஞ்சீதாமா கரிகளப கும்பஸ்தந நதா
பரிக்ஷீணமத்யே பரிணத சரச்சந்த்ரவதநா।
தநுர் பாணாந் பாசம் ஸ்ருணிமபி ததாநாகரதலை:
புரஸ்தாத் ஆஸ்தாம் ந: புரமதிது: ஆஹோபுருஷிகா॥)

இதன் பதவுரையாவது:—

**क्वणत्काञ्चीदामा** (க்வணத்காஞ்சீதாமா) = சப்திக்கின்ற தங்கச்சலங்கைகளோடு கூடிய ஒட்யாணத்தால் அலங்கரிக்கப்படவளாயும்

**करिकलभकुंभस्तननता** (கரிகலப கும்பஸ்தநநதா) = மதம்பிடித்த யானைக்குட்டியின் கும்பம் (தலைப்ரதேசம்) போல் பெருத்ததான குசபாரத்தால் கொஞ்சம் குனிந்து நிற்கிறவளாயும்

**मध्ये** (மத்யே) = இடுப்பு ப்ரதேசத்தில்

**परिक्षीणा** (பரிக்ஷீணா) = க்ருசமானவளாயும்

| | |
|---|---|
| ...रच्चन्द्रवदना (பரிணத சரச்சந்த்ரவதனா) | = ப்ரிபூர்ணமானசரத்கால சந்த்ர மண்டலம் போல் உள்ளமுகத்தோடு கூடினவளாயும் |
| ...: (தநு) | = கரும்பு வில்லையும் |
| ...णान् (பாணாந்) | = புஷ்பபாணங்களையும் |
| पाशं (பாசம்) | = பாசக்கயிற்றையும் |
| सृणिमपि (ஸ்ருணிமபி) | = ஈட்டியையும் |
| करतलैः (கரதலை:) | = நான்கு கைகளால் |
| दधाना (ததானா) | = தரிசித்துக் கொண்டிருக்கிறவளாயும் உள்ள |
| ...रमथितुः (புரமதிது:) | = த்ரிபுராந்தகனான பரமசிவனுடைய |
| आहोपुरुषिका (ஆஹோபுருஷிகா) | = அஹங்காரரூபிணியான பரதேவதையானவள் |
| नः (ந:) | = எங்களுக்கு |
| पुरस्तात् (புரஸ்தாத்) | = முன்பாகவே |
| आस्तां (ஆஸ்தாம்) | = இருக்கட்டும் (விளங்கி விலாஸம் செய்யவேண்டும் |

தாத்பர்யம்:—ஸ்ரீவித்யாதந்த்ரத்தில் ஸமயம், கௌலம் என்று இரண்டுவித ஆசாரம் உண்டு. பாஹ்யபூஜையை அவலம்பித்த மஹான்களை கௌலாசாரத்தை கைகொண்டவர்களென்றும், ஆந்தரமான பராசக்தியினுடைய த்யானத்தில் ஈடுபட்டவர்களை ஸமயாசாரத்தைக் கைகொண்டவர்களென்றும், சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த ஸமயமதத்தை அனுஸரித்து, **सुधासिन्धु** (ஸுதாஸிந்து) என்ற சப்தத்தால் சொல்லப்படுகின்ற

ப்ரம்மரந்த்ரத்தில் பராதேவதையினுடைய த்யானத்தை
செய்கிற, 8-வது ச்லோகத்திற்கு உபயோகியாக இந்த ச்லோ
மணிபூரகே (மணிபூரகம்) என்ற ஸ்தானத்திலிருந்து, ஹ்ருத
(ஹ்ருதயகமல) மத்தியில், த்வம் பதத்தின் லக்ஷ்யார்த்தய
ப்ரத்யகாத்மாவுக்கு எதிராக ஸாக்ஷாத் பராதேவதையான
ப்ரகாசிக்கட்டும், என்று ஸாதகர்கள் அம்பாளை ப்ரார்த்தி
கின்றார்கள்.

இந்த சரீரத்திற்குள் மூலாதாரம், மணிபூரகம், ஸ்வாதிஷ்டானம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை, ப்ரம்மரந்த்ரம் என்று சில உத்தமமான ஸ்தானங்கள் சக்ராகாரங்களாக ஸுஷும்னு நாடியை ஆச்ரயித்து விளங்கிவருகின்றன. அந்த சக்ரங்களுக்குள், மணிபூரகம் என்பதானது, த்ரிபுராந்தகன் என்று ப்ரஸித்தி பெற்ற மஹாகாமேச்வரனுடைய ஸ்தானமாகும். அந்த மணிபூரகத்தில் காமேச்வரனுடைய ஸ்வரூபத்திற்கு வேறுபடாததான ஸ்வரூபத்தோடு ஜகதீச்வரியானவள் விளங்கிவருகிறாள். அந்த அவஸரத்தில் அம்பாளுடைய ஸ்வரூபமோ எவ்விதமென்பதை உபாஸகர்கள் அறிந்து த்யானம் செய்யவேண்டும். அந்த ஸ்வரூபமோ, ஜகதீச்வரியான பராசக்தியானவள் நித்யயுவதியான ஸ்வரூபத்தோடு விளங்கிவருகிறாள். அநேக விதமான ரத்னங்களிழைத்த தங்க ஒட்டியாணம் அம்பாளுடைய இடுப்பில் பாஸித்து வருகிறது. அந்த ஒட்டியாணத்தில் தங்கச் சலங்கைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த சலங்கைகளும், கண, கண, என்று அம்பாள் ஸஞ்சரிக்கும் போது சப்திக்கின்றன. அத்துடன் மதம்பிடித்த யானைக் குட்டியின் தலையில் காணப்படும் இரண்டு கும்பங்களைப் போல் அம்பாளுடைய இரண்டு குசங்களும் ஸுவ்ருத்தமாயும் (வட்ட

லக்ஷணமாயும், ஸாமுத்ரிகா சாஸ்த்ரத்திற்கு ஒத்ததாயும் காரணத்தால், அந்த பார நிமித்தமாக, அம்பாளுடைய கொஞ்சம் குனிந்ததாகவும் இருக்கிறது. இடுப்புப்ரதேசமோ த்ரிகா சாஸ்த்ரப்படி ரொம்பவும் க்ருசமாகவும் (இருக்கிறதோ, லையோவென்று ஸந்தேஹிக்கும்படி) அல்பமாகவும் இருக்கிறது. ான்கு கைகளோடும் கூடினவளாகவும் அம்பாள் விளங்கிவருகிருள். அம்பாளுடைய ஒரு கையில் கரும்பு வில்லும், மற்றொரு கையில் புஷ்பபாணங்களும், மற்றொரு கையில் பாசக்கயிறும், மற்றொரு கையில் ஈட்டியும் விளங்கி வருகின்றன.

அத்துடன் த்ரிபுராந்தகனை பரமசிவனுடைய ஸஹசாரிணியாகவும் இருந்து வருகிருள். பரமசிவனுக்கு த்ரிபுராந்தகன் என்ற பெயர் வந்ததற்கு, த்ரிபுராஸுரர்களை ஸம்ஹரித்ததுமட்டும் காரணமல்ல. புரம் என்றால் பீஜாக்ஷரத்திற்கும் பெயருண்டு. த்ரிபுரை என்ற பெயரோடு கூடின பராம்பிகையினுடைய மூல மந்த்ரவர்ணங்களே, த்ரிபுரம் என்று சொல்லப்படும். அந்த மூன்று பீஜாக்ஷரங்களாகிய திவ்யமான க்ஷீரத்தை பரமசிவனாகிய காமேச்வரன், தன்னுடைய மனதாகிய மத்தால் கடைந்தார். அதிலிருந்தும் நவநீதம் போல், ஜகதீச்வரியினுடைய ஸ்வரூபமானது ஆவிர்ப்பவித்தது. அக்காரணத்தாலும், பரமசிவனுக்கு த்ரிபுரமதனன் என்று பெயர் வந்தது. த்ரிபுராந்தகன் என்ற பதத்திற்கோ, மூன்று பீஜாக்ஷரங்களுடைய அர்த்தத்திற்கு (நிச்சயத்திற்கு—அதாவது, அந்த மூன்று பீஜாக்ஷரங்களுக்கும் எந்த அர்த்தத்தில் முக்யமான தீர்மானம் என்பதற்கு), தான் கர்த்தாவாக ஆனர், என்பதே தானாகும். அந்த பரமசிவனுடைய ஆஹோபுருஷிகையாக பராசக்தியானவள் விளங்கி வருகிருள். புருஷ: புருஷ: என்ற பதமானது

ப்ரத்யகாத்மாவைச் சொல்லும். அந்த ப்ரத்யகாத்மாவைச்
கிற புருஷ சப்தமும் அஹம் என்ற பதத்திற்கு வாச்யம
(சொல்லப்படுகிறது) என்பது ப்ரஸித்தமானது. आहो (ஆஹோ
என்ற சப்தத்திற்கு, ஆச்சர்யம் என்ற அர்த்தம் உண்டு. ப்ர
ருதத்தில், அஹம் என்ற தன்மையே, ஆஹோ என்ற சப்தத
தின் பொருளாகும். இதனால் காமேச்வரனுடைய அஹம் பத
லக்ஷ்யமான, ப்ரத்யகாத்மாவே காமேச்வரீ என்ற தீர்மானம் வெளி
யாகிறது. पुरमथितुः (புரமதிது:) என்ற பதத்தால் காமேச்வர
னுடைய என்று அர்த்தம். ஆஹோ என்றதினல் அஹம் பத
வாச்யமான புருஷிகா, ப்ரத்யகாத்மா என்ற அபிப்ராயத்தை
पुरमथितुः आहोपुरुषिका (புரமதிது: ஆஹோபுருஷிகா) என்ற
பதங்களால் அறிந்து கொள்ளவேண்டும். இதனல் சிவனுக்கும்
சக்திக்கும் ஐக்யம் தான் ஸ்ரீவித்யாதந்த்ர ஸித்தம் என்பது
வெளியாகிறது.

இவ்விதமான மஹிமையோடு ஜகதீச்வரியானவள் மணிபூரக
சக்ரத்தில் காமேச்வராபின்னமாக விளங்கி வருகிருள். ஸாதக
புருஷர்களுடைய ஜீவனுடைய ஸ்தானமோ, ஹ்ருதயகமலம். அந்த
ஜீவனுக்கு மணிபூரகம் போவதற்கு சக்தி இல்லே. அதற்காக
எவ்விதமான அவஸரத்தோடு மணிபூரகத்தில் பரதேவதையான
வள் விளங்கி வருகிருளோ, அந்த ரூபத்தோடேயே, ஜீவனிருக்கும்
ஹ்ருதய கமலத்தில், ஜீவனுக்கு எதிராக ப்ரகாசிக்கட்டும் என்று
ஸாதகபுருஷர்கள் அம்பாளுடைய ஸாந்நித்யத்தை ப்ரார்த்திக்கின்
ருர்கள். இந்தச்லோகமானது ஜாகரத்திலோ (விழித்திருக்கும்
போதோ) அல்லது ஸ்வப்னத்திலோ அம்பாளுடைய திவ்யதர்ச
னத்திற்கு அந்தரங்க உபாயமான மந்த்ரமாகும். ஹ்ருதய கமலத்

தவியை த்யானம் செய்ய சக்தியற்ற பஹிர்முஹர்களான
கள் வெளியிலேயே ஸ்ரீசக்ரத்தில் பிந்துவில் ஸர்வேச்வரியான
கன்மாதாவை த்யாநுவாஹநம், முதலான ஷோடசோபசாரங்க
ளால் பூஜைசெய்து, क्वणत्काञ्चीदामा [க்வணத்காஞ்சீதாமா] என்ற
ச்லோகத்தை ஒருபக்ஷத்திலோ (15 நாள்) அல்லது ஒரு மண்டலத்
திலோ (45 நாள்) லக்ஷம் ஆவர்த்தி ஆகும்படி ஜபம் செய்துமுடித்
தால், தேவியினுடைய தர்சனம் அந்த உபாஸனுக்கு ஜாகரத்தில்
கிடைப்பது அறிதானுலும்கூட ஸ்வப்நத்தில் அந்த உபாஸகனுக்கு
தேவியின் தர்சனம் அவச்யம் கிடைத்து, அம்பாளுடைய க்ருபா
கடாக்ஷத்திற்கு பாத்ர பூதனுக ஆகி, ஸர்வவிதமான ஸௌபாக்யங்க
ளோடும் கூடினவனுக அந்த உபாஸகன் ஆகுவான், என்பது
நிச்சயம்.

இந்த வித்யைக்குப் பெயர் மஹாவித்யா என்று சொல்லப்ப
டும். இந்த வித்யையை ப்ரம்மர்ஷிகளுக்குள் வஸிஷ்டர் விச்வா
மித்ரர் முதலானவர்களும் ராஜாக்களுக்குள் ஜநகர் அச்வபதி
அஜாத சத்ரு முதலானவர்களும் கைகொண்டு, பராம்பிகையினு
டைய ஸந்தர்சனமும் அவர்களுக்கு ஏற்பட்டு, அக்காரணத்தால்
அவர்கள் லோகமான்யர்களாக விளங்கிவருகிருள். அகையால் உத்
தமான மானிட ஜன்மாவை அடைந்த பெரியோர்கள் லோகத்
திற்கே, தாயாரான பராசக்தியை ஆராதிக்கவோ, அந்த பரதே
வதையினுடைய மூலமந்த்ரங்களை ஜபம்செய்யவோ, த்யானம் பண்
ணவோ, கடமைப்பட்டவர்களாகவே ஆகின்றுர்கள். அதிலும்
தேவியினுடைய ஸாக்ஷத்காரத்திற்கு இந்த ச்லோகம் ரொம்பவும்
அவச்யமானதினுல், இந்த ச்லோகத்தை விதிப்படி ஸித்திசெய்து
மனிதர்கள் ஸௌபாக்யத்தை அடையவேண்டும் என்பதும் அவச்ய
மாகும்.

(தொடரும்)

# ஸ்ரீ சங்கரவிஜயம்.

## கநகதாரா ஸ்தோத்ரம்.

2-வது ச்லோகம்

मुग्धा मुहुर्विदधती वदने मुरारेः
प्रेमत्रपाप्रणिहितानि गतागतानि ।
मालादृशोः मधुकरीव महोत्पलेया
सामेश्रियं दिशतु सागरसंभवायाः ॥

முக்தா முஹுர்விதததீ வதநே முராரே:
ப்ரேமத்ரபாப்ரணிஹிதாநி கதாகதாநி ।
மாலாத்ருசோ: மதுகரீவ மஹோத்பலேயா
ஸாமேச்ரியம் திசது ஸாகரஸம்பவாயா: ॥

இதன் பதவுரையோ:—

| | |
|---|---|
| **महोत्पले** (மஹோத்பலே) | = நீலோத்பல புஷ்பத்தில் |
| **मधुकरी इव** (மதுகரீ இவ) | = வண்டுபோல் |
| **मुरारेः** (முராரே:) | = மஹாவிஷ்ணுவினுடைய |
| **वदने** (வதனே) | = முகத்தில் |
| **प्रेमत्रपाप्रणिहितानि** (ப்ரேமத்ரபாப்ரணிஹிதாநி) | = ப்ரேமை, லஜ்ஜை இந்த இரண்டுகளாலும் ஏற்பட்ட |
| **गतागतानि** (கதாகதாநி) | = கமனுகமனங்களை (தர்சனுதர்சனங்களை) அதாவது, கொஞ்சநேரம் பகவானை பார்க்கிறது, பிறகு கொஞ்சம் பார்க்காமலிருக்கிறது என்பதை |

ஹா—:) = அடிக்கடி

ர் (விதததீ) = செய்கிறதாயும்,

(முக்தா) = மந்தஹாஸத்துடன் அழகாகவுமி ருக்கிற

सागरसम्भवाया: (ஸாகரஸம்ப வாயா:) = மஹாலக்ஷ்மியினுடைய

या (யா) = யாதொரு

दृशोः माला (த்ருசோ: மாலா) = இரண்டு கண் த்ருஷ்டிகளுடைய வரிசையுண்டோ

सा (ஸா) = அந்த த்ருஷ்டிவரிசையானது

मे (மே) = எனக்கு

श्रियं (ச்ரியம்) = ஸம்பத்தை

दिशतु (திசது) = கொடுக்கட்டும்.

இதன் தாத்பர்யமானது:— பெரியதாயும் நல்லவாஸனையுள்ளதாயும் உள்ள நீலோத்பல புஷ்பத்தில் ரஸத்தை க்ரஹிப்பதற்காக வண்டுகளின் வரிசையானது அந்த புஷ்பங்களில் வந்து உட்காருவதாகவும், போகிறதாகவும், எப்படி காணப்படுமோ, அதுபோல் பாற்கடலில் உத்பவித்த மஹாலக்ஷ்மீயானவள், நீலமேகச்யாமள வர்ணமுள்ள தனது பர்த்தாவான மஹாவிஷ்ணுவினுடைய முகமாகிய நீலோத்பலபுஷ்பத்தில், தன்னுடைய இரண்டு த்ருஷ்டிகளையும், பரமப்ரேமையினால் செலுத்துகிறவளாயும், பிறகு லஜ்ஜையினால் அந்த த்ருஷ்டிகளையே திருப்பிக்கொள்கிறவளாயும் இருந்துகொண்டு, மந்தஹாஸத்துடன் விளங்கிவருகிறாள். அதாவது, ப்ரேமையோடு ஸ்ரீமஹாலக்ஷ்மி தேவியானவள் மஹாவிஷ்ணுவினுடைய முகத்தைப் பார்க்கிறதும், பிறகு லஜ்ஜையினால் பார்க்காமலிருப்பது போலும், தன்னுடைய த்ருஷ்டிவிலாஸங்களைச் செய்துகொண்டு, விளங்குகிறாள். அவ்விதமுள்ள மஹாலக்ஷ்மீயினுடைய கடாக்ஷவீக்ஷணமானது, அகண்டமான ஐச்வர்யத்தை எனக்குக் கொடுக்கவேண்டும் என்று அர்த்தத்தை அநுஸந்தானம் செய்துகொண்டு இந்த ச்லோகத்தைப் பாராயணம் செய்யவேண்டும்.

**3-வது ச்லோகம்.**

**विश्वामरेन्द्रपद विभ्रमदानदक्षं**
**आनन्दहेतुरधिकं मुरविद्विषोऽपि ।**
**ईषन्निषीदतु मयि क्षणं ईक्षणार्धं**
**इन्दीवरोदरसहोदरं इन्दिरायाः ॥**

விச்வாமரேந்ரபத விப்ரமதானதக்ஷம்
ஆநந்தஹேதுரதிகம் முரவித்விஷோபி ।
ஈஷந்நிஷீதது மயி க்ஷணம் ஈக்ஷணார்த்தம்
இந்தீவரோதரஸஹோதரம் இந்திராயா: ॥

இதன் பதவுரையாவது:—

**विश्वामरेन्द्रपदविभ्रमदानदक्षं** (விச்வாமரேந்த்ரபதவிப்ரமதானதக்ஷம்) = தேவேந்த்ரனுடைய ஸ்தானமாகிற ஸ்வர்க்கத்தில் அடையக் கூடிய ஸமஸ்தவிதமான விலாஸங்களையும் [போகஸுகத்தை] இந்த லோகத்திலேயே பக்தர்களுக்கு கொடுக்கிற ஸாமர்த்யமுள்ளதாயும்

**मुरविद्विषोऽपि** (முரவித்விஷோபி) = மஹாவிஷ்ணுவுக்குக்கூட

**अधिकं यथातथा** (அதிகம் யதா ததா) = அளவிடமுடியாமலிருக்கக்கூடிய

**आनन्दहेतुः** (ஆநந்தஹேது:) = ஸுகத்தைக் கொடுப்பதற்கு காரணமாயும்

**इन्दीवरोदरसहोदरं** (இந்தீவரோதரஸஹோதரம்) = நீலோத்பல புஷ்பத்தினுடைய மத்ய பாகத்திற்கு ஸமானமாயும் இருக்கிற

**इन्दिरायाः** (இந்திராயா:) = மஹாலக்ஷ்மியினுடைய

**ईषत्** (ஈஷத்) = ஸ்வல்பமான

**ईक्षणार्धं** (ஈக்ஷணார்த்தம்) = கடைக்கண்ணின் பாதிப்பார்வையானது

...) = என்னிடத்தில்

...ணம்) = ஒரு க்ஷணம் மட்டும்

...து (நிஷீதது) = இருக்கட்டும்.

**இதன் தாத்பர்யம்:**—மஹாலக்ஷ்மீயினுடைய கடைக்கண்ணி னுடைய பாதிப்பார்வையே ஒரே க்ஷணமாவது ஒருவனுக்கு ஏற் பட்டால், அந்த மனிதன் பெரிய ஸார்வபௌமனாக, (அகண்ட ஐச்வர்யத்தோடு கூடினவனாக) ஆய்விடலாம். ஸ்வர்க்கலோகத்தி லுள்ள ஸமஸ்தமான ஸுகங்களையும், இந்த லோகத்திலேயே தனது பக்தனுக்கு மஹாலக்ஷ்மீயினுடைய கடாக்ஷவீக்ஷணமானது கொடுக் கும் வல்லமையுள்ளது. மஹாவிஷ்ணு கூட லக்ஷ்மீகடாக்ஷம் தன் பேரில் விழுந்து விழுந்து தான், அபரிச்சின்னமான ஆநந்தத்தை அனுபவிக்கக் கூடியதான பாக்யத்தை அடைந்து வருகிறார். லக்ஷ்மீ தேவியினுடைய கடாக்ஷவீக்ஷணமே நீலோத்பல புஷ்பத்தினுடைய மத்ய பாகத்திற்கு ஸமானமானது. நீலோத்பல புஷ்பத்தை லக்ஷ்மீ தேவியினுடைய கடாக்ஷவீக்ஷணத்திற்கு உபமானமாகச் சொன்னதி லிருந்து, புஷ்பங்களுக்குள் நீலோத்பல புஷ்பமே சிறந்ததாக ஆகும். அவ்விதமான புஷ்பங்களால் பூஜை செய்வதற்கு அகண்ட ஸச்சிதானந்த ரூபமான பரப்ரம்மமே பாத்ரமாகும். மஹாலக்ஷ்மீ தேவியினுடைய கடாக்ஷ வீக்ஷணம் எந்த மனிதனிடத்தில் ஏற்படு கிறதோ, அந்த மனிதன் நீலோத்பல புஷ்பத்தால் பூஜிக்கத்தகுந்த பரப்ரம்மத்தினுடைய பாவத்தை அடைந்து ஈச்வரனாகவே தானாகி விடுகிறான் என்று அறியவேண்டும். ஆகையால் மஹாலக்ஷ்மீதேவி யினுடைய கடாக்ஷத்தை அடைய எல்லோரும் அவச்யம் கநகதாராஸ் தோத்ரத்தை பாராயணம் செய்யவேண்டியது.

(தொடரும்)

# ப்ரம்மவித்யா.

முதல் ஸூத்ரமானது உத்தரமீமாம்ஸா சாஸ்த்ரத்தின் ஆரம்பத்தை ஸமர்த்தனம் செய்யும் ஸூத்ரமாகும். அந்த முதல் ஸூத்ரத்திலோ முமுக்ஷுக்களால் ப்ரம்ம ஸாக்ஷாத்காரத்தை அடைவதற்கு வேதாந்த விசாரம் செய்யத்தகுந்தது என்று சொல்லப்பட்டது. அசனால் வேதாந்தவாக்ய ச்ரவணமூலமாக ப்ரம்மத்தை விசாரிக்க வேண்டுமென்றும் தெரிகிறது. ப்ரம்மத்தை விசாரிக்க வேண்டும் என்று சொன்னதினாலேயே, ப்ரம்மத்தினுடைய லக்ஷணம், ப்ரப்மத்தினுடைய ப்ரமாணம், இவைகளும் ப்ரம்ம விசாரத்தில் விஷயமாகிறது என்றும் ஸித்திக்கிறது. ஆகிலும், அந்த ப்ரம்மத்திற்கு லக்ஷணம் என்ன என்பதை நிரூபணம் செய்ய முடியாததினாலும், **लक्षणप्रमाणाभ्यांहि वस्तुनः वस्तुत्वसिद्धिः** (லக்ஷணப்ரமாணாப்யாம்ஹி) வஸ்துந: வஸ்துத்வஸித்தி:) என்ற ந்யாயத்தால் லக்ஷணம் இல்லாத போனால் லக்ஷ்ய வஸ்துவிற்கு ஸ்வரூபமே ஸித்திக்காததினாலும் ப்ரம்மமென்ற வஸ்துவேஇல்லை. அவ்விதமிருக்கும்பொழுது இல்லாத ப்ரம்மத்தை விசாரிக்கவேண்டுமென்று முன் அதிகாணத்தில் சொல்லப்பட்ட தீர்மானமானது மிகவும் தப்பானது என்று பூர்வபக்ஷிகள் ஆக்ஷேபிக்கிறார்கள். அந்த ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்வதற்காகவே உத்தரமீமாம்ஸா சாஸ்த்ரத்தின் ஆரம்பரூபமான இரண்டாவது அதிகரணமானது ஏற்பட்டது. அதாவது:

**जन्माद्यस्य यतः ॥** (ஜந்மாத்யஸ்ய யத:)

...ற அதிகரணமே உத்தரமீமாம்ஸா சாஸ்த்ரத்தின் ஆரம்ப ...ணமாகும். இந்த அதிகரணத்திற்கு பூர்வாதி கரணத்தோடு ஆக்ஷேப ஸங்கதி என்ற ஸம்பந்தத்தை அறிந்துகொள்ளவேண்டும். பூர்வாதிகரணத்தில் ப்ரம்மவிசாரம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. விசாரத்திற்கு விஷயமான ப்ரம்மத்திற்கு லக்ஷணமே இல்லாததினுல் முன் அதிகரணத்தில் சொல்லப்பட்ட ஸித்தாந்தம் தப்பாகும், என்று ஆக்ஷேப ஸங்கதியின் ஸ்வரூபமாகும்.

**यतोवा इमानि भूतानि जायन्ते** (யதோவா இமானி பூதாநி ஜாயந்தே) என்றது முதலான ப்ரம்மத்தினுடைய லக்ஷணத்தை ரப்காசப்படுத்துகிற வேதாந்த வாக்யங்களெல்லாம் இந்த அதிகாணத்தில் விஷயமாகும். இந்த வேதாந்த வாக்யங்களில் சொல்லப்படும் லக்ஷணம் ப்ரம்ம லக்ஷணமாக ஆகுமா? ஆகாதா? என்று ஸந்தேஹத்தை அறிந்து கொள்ளவேண்டும். இந்த வேதாந்த வாக்யங்களில் சொல்லப்பட்ட லக்ஷணம் ப்ரம்ம லக்ஷணமாக ஆகாததினுல் ப்ரம்ம ஸ்வரூபமே ஸித்திக்காது. அதனுல் மோக்ஷம் என்ற புருஷார்த்தத்திற்கு அவகாசமே இல்லை என்று பூர்வபக்ஷமாகும். வேதாந்த வாக்யங்களில் சொல்லப்பட்ட லக்ஷணம் ப்ரம்ம லக்ஷணமாக ஆகுமானதினுல் ப்ரம்ம ஸ்வரூபம் ஸித்திக்கிறது. இதனுல் மோக்ஷம் என்ற பரமபுருஷார்த்தமும் ஸித்திக்கலாம், என்பது ஸித்தாந்தமாகும். மேற்கண்ட ப்ரகாரம் விஷயம், விசயம், ஸங்கதி பூர்வபக்ஷம், ஸித்தாந்தம், என்ற ஐந்து அதிகரண லக்ஷணங்களையும் இந்த இரண்டாவது அதிகரணத்தில் அறிந்துகொள்ள வேண்டும். பூர்வ பக்ஷத்தின் ப்ரகாரத்தை அடியில் கண்டவாறு அறியவும். அதாவது:—

**जन्माद्यस्य यतः ॥** (ஜந்மாத்யஸ்ய யத:)

...ற அதிகரணமே உத்தரமீமாம்ஸா சாஸ்த்ரத்தின் ஆரம்ப ...ணமாகும். இந்த அதிகரணத்திற்கு பூர்வாதி கரணத்தோடு ஆக்ஷேப ஸங்கதி என்ற ஸம்பந்தத்தை அறிந்துகொள்ளவேண்டும். பூர்வாதிகரணத்தில் ப்ரம்மவிசாரம் செய்யவேண்டுமென்று சொல் லப்பட்டது. விசாரத்திற்கு விஷயமான ப்ரம்மத்திற்கு லக்ஷணமே இல்லாததினுல் முன் அதிகரணத்தில் சொல்லப்பட்ட ஸித்தாந்தம் தப்பாகும், என்று ஆக்ஷேப ஸங்கதியின் ஸ்வரூபமாகும்.

**यतोवा इमानि भूतानि जायन्ते** (யதோவா இமானி பூதாநி ஜாயந்தே) என்றது முதலான ப்ரம்மத்தினுடைய லக்ஷணத்தை ரப் காசப்படுத்துகிற வேதாந்த வாக்யங்களெல்லாம் இந்த அதிகரணத் தில் விஷயமாகும். இந்த வேதாந்த வாக்யங்களில் சொல்லப்படும் லக்ஷணம் ப்ரம்ம லக்ஷணமாக ஆகுமா? ஆகாதா? என்று ஸந்தே ஹத்தை அறிந்து கொள்ளவேண்டும். இந்த வேதாந்த வாக்யங்க ளில் சொல்லப்பட்ட லக்ஷணம் ப்ரம்ம லக்ஷணமாக ஆகாததினுல் ப்ரம்ம ஸவரூபமே ஸித்திக்காது. அதனுல் மோக்ஷம் என்ற புரு ஷார்த்தத்திற்கு அவகாசமே இல்லை என்று பூர்வபக்ஷமாகும். வேதாந்த வாக்யங்களில் சொல்லப்பட்ட லக்ஷணம் ப்ரம்ம லக்ஷண மாக ஆகுமானதினுல் ப்ரம்ம ஸ்வரூபம் ஸித்திக்கிறது. இதனுல் மோக்ஷம் என்ற பரமபுருஷார்த்தமும் ஸித்திக்கலாம், என்பது ஸித்தாந்தமாகும். மேற்கண்ட ப்ரகாரம் விஷயம், விசயம், ஸங்கதி பூர்வபக்ஷம், ஸித்தாந்தம், என்ற ஐந்து அதிகரண லக்ஷணங்களையும் இந்த இரண்டாவது அதிகரணத்தில் அறிந்துகொள்ள வேண்டும். பூர்வ பக்ஷத்தின் ப்ரகாரத்தை அடியில் கண்டவாறு அறியவும். அதாவது:—